செ.வெ.எண்.458/2021 நாள்.11.10.2021

**திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள கந்திலி, திருப்பத்தூர், மாதனூர் மற்றும் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையங்களை மாவட்ட தேர்தல் பார்வையாளர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு.சி.காமராஜ்.இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.கி.பாலகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

திருப்பதூர் மாவட்டம் கந்தில் ஊராட்சி ஒன்றியம் கெஜல்நாய்கன்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தை மாவட்ட தேர்தல் பார்வையாளர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு.சி.காமராஜ். இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.கி.பாலகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனை தொடர்ந்து திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் குருசிலப்பட்டு அரசு மேல்நிலை பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தையும், மாதனூர் ஊராட்சி ஒன்றியம் ஓரியன்டல் உருது மேல்நிலைப்பள்ளி அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தையும், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் வாக்கு எண்ணும் மையத்தையும் மாவட்ட தேர்தல் பார்வையாளர் திரு.சி.காமராஜ். இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர். கி.பாலகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஊரக பகுதிகளில் ஊரக உள்ளாட்சி தேர்தல் 2021 திருப்பத்தூர், கந்திலி, நாட்றம்பள்ளி, ஜோலார்பேட்டை மாதனூர் மற்றும் ஆலங்காயம் ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 1,779 கிராம ஊராட்சி வார்டுகள், 208 கிராம ஊராட்சி தலைவர்கள், 125 ஊராட்சி ஒன்றிய வார்டுகள் மற்றும் 13 மாவட்ட ஊராட்சி வார்டுகள் ஆகியவற்றிற்கு ஊரக உள்ளாட்சி தேர்தல் இரண்டு கட்டங்களா நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நாளை நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கையில் நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் 347 வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 680 வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 616 வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள், கந்திலி ஊராட்சி

ஒன்றியத்தில் 740 வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள், மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் 700 வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் 355 வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள் என மொத்தம் 6 ஊராட்சி ஒன்றியங்களில் 3,438 அலுவலர்கள் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடயுள்ளார்கள்.

மேலும் கொரோளா முன்தடுப்புப்பணிகளான முகக்கவசம் அணிந்தும், சமூக இடைவெளியை கடைபிடித்தும், கையுறை அணிந்தும் போன்ற கொரோனா தடுப்புப்பணிகளை அவசியம் பின்பற்றி உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடத்தபட வேண்டும். வாக்குகள் எண்ணும் மையங்களில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கும், முகவர்களுக்கும் தேவையான குடிநீர் வசதி, உணவு வசதி, உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும் வாக்கு எண்ணிக்கை நேர்மையாக நடத்தப்பட வேண்டும் என மாவட்ட தேர்தல் பார்வையாளர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கும் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கும் அறிவுறைகள் வழங்கினார்கள்.

இந்த ஆய்வுகளில் திருப்பத்தூர் சார் ஆட்சியர் மரு.பி.அலர்மேல்மங்கை.இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.செல்வராசு, கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சுப்பாராஜூ, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திரு.ரூபேஷ்குமார், திரு.துரை, திரு.வினாயகம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**